Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.529/2019

**Depositions of PW- 10**

| Name | திரு.மகேஷ்குமார் | Occupation | காவல் ஆய்வாளர் |
|---|---|---|---|
| Father's name | ஜெயசீலன் | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 04th day of June 2026.

04.06.2026

எதிரிகள் ஆஜர்.

**சாட்சி வீடியோ காணொளி மூலம் ஆஜரானார்**.

**முதல் விசாரணை**

நான் தற்போது ராமநாதபுரம் மாவட்டம் தங்கச்சிமடம் காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 14.03.2017 அன்று திருவில்லிபுத்தூர் நகர் வட்டக்காவல் ஆய்வாளராக பணிபுரிந்தபோது திருவில்லிபுத்தூர் போக்குவரத்து சார்பு ஆய்வாளர் துர்க்கைசாமி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார்மனுவை பெற்று அதன் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண்.185/2017 பிரிவுகள்.294(b), 323, 353, 506(1) இதச ஆக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அசாஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் அன்றைய தினமே சம்பவயிடம் சென்று சாட்சிகள் பேச்சிமுத்து, கருப்பசாமி ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்து வாக்குமூலம்பதிவு செய்தேன். **மாதிரி வரைபடம் அசாஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

பின்னர் அன்றைய தினமே சாட்சிகள் துர்க்கைசாமி, ராமசாமி, துடியாண்டி ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் எதிரிகளை மருத்துவமனை அழைத்து சென்று அவர்கள் மது அருந்தியதற்காக

மருத்துவ பரிசோதனை செய்து மருத்துவ சான்று பெற்றேன். பின்னர் எதிரிகளை காரணம் கூறி கைது செய்து திரேக பரிசோதனை செய்து பாராவசம் ஒப்படைத்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். பின்னர் 17.03.2017 அன்று சேகர், அழகுமலை ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் 20.03.2017 அன்று ஜஸ்டின் திரவியம், மாரியப்பன் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் 23.03.2017 அன்று திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனை மருத்துவர் பழனிச்சாமி என்பவரை விசாரித்து விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் எனது புலன் விசாரணை முடித்து எதிரிகள் மீது பிரிவுகள்.294(b), 323, 353, 506(1) இதச வின் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

இவ்வழக்கின் புகார்தாரரான சாட்சி துர்க்கைசாமி தனது புகாரில் நடந்ததாக சொல்லப்படும் சம்பவத்தை தனிப்பட்ட சாட்சிகளான சேகர், அழகுமலை, ஜஸ்டின் திரவியம் ஆகியோர் நேரில் பார்த்ததாக புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். ஆனால் அவர்கள் பற்றி சம்பவயிடம் சென்று நான் விசாரித்து தெரிந்து கொண்டேன். அதேபோல் சாட்சிகள் துர்க்கைசாமி, துடியாண்டி, மாரியப்பன், ராமசாமி ஆகியோர்கள் தங்களது விசாரணையில் நடந்ததாக சொல்லப்படும் சம்பவத்தை தனிப்பட்ட சாட்சிகளான சேகர், அழகுமலை, ஜஸ்டின் திரவியம் ஆகியோர் நேரில் பார்த்ததாக தங்களது வாக்குமூலங்களில் சொல்லில்லை என்றால் சரிதான். ஆனால் மேற்படி இவ்வழக்கு சம்பவம் நடந்துகொண்டிருந்தபோது சுற்றியிருக்கும் நபர்களை அவர்கள் கவனித்திருக்க வாய்ப்பு இல்லை. மேற்படி தனிப்பட்ட சாட்சிகளான சேகர், அழகுமலை, ஜஸ்டின் திரவியம் ஆகியோர்கள் இவ்வழக்கு சம்பவத்தை நேரில் பார்த்ததாக சாட்சிகள் இல்லை என்றாலும் இவ்வழக்கிற்காக அவர்களது சாட்சிகளாக உற்பத்தி செய்யப்பட்டுள்ளனர் என்றாலும் சரியல்ல. சாட்சி துர்க்கைசாமி தனது புகாரின் விசாரணையிலும் எதிரிகள் தேவிடியா மகனே என்ற தகாத வார்த்தையால் திட்டியதாக சொல்லவில்லை என்றால் சரிதான். நான் அவரை விசாரித்தபோது மேற்படி தகாத வார்த்தையால் பேசியது பற்றி கூறினார். அதுபற்றி வாக்குமூலங்கள் எதுவும் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். சாட்சி ஜஸ்டின் திரவியம் என்பவரை 20.032017 விசாரணை செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

மேற்படி சாட்சி ஜஸ்டின் திரவியம் என்பவர் போலீசார் விசாரணையில் காரில் இருந்த நபர்களை சார்பு ஆய்வாளர் வெளியே வரச்சொல்லி ஊத சொன்னதாக போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். வாகன சோதனையின்போது வண்டியை நிறுத்தசொன்னபோது நிறுத்தாமலும் வாகன தணிக்கைக்கு ஒத்துழைக்காமலும் இருந்த காரணத்தினால் அவர்கள் பேசும்பொழுது குடிபோதையில் இருந்தது தெரியவந்தது. மருத்துவர் பழனிச்சாமி என்பவரை 23.03.2017 அன்று விசாரணை செய்துள்ளேன் என்றால் சரிதான். எனது விசாரணையில் மருத்துவர் பழனிச்சாமி, போலீசார் எதிரிகளை மருத்துவமனைக்கு அழைதது வந்ததாகவோ அவர்களை தான் பரிசோதனை செய்ததாகவோ வாக்குமூலம் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். அதற்கு காரணம் கைது செய்ததாக சொல்லப்படும் தேதியில் எதிரிகளை மருத்துவ பரிசோதனைக்கு மருத்துவரிடம் அழைத்து செல்லாததால் தான் அவர் தனது வாக்குமூலத்தில் அதுபற்றி கூறவில்லை என்றால் சரியல்ல.

எதிரிகள் மது அருந்தியதாக சொல்லப்படும நேரத்தில் அதனை ஊர்ஜிதம் செய்வதற்கு சிறுநீர் பரிசோதனை மற்றும் இரத்த பரிசோதனை செய்ய வேண்டுகோள் கடிதம் எதுவும் என்னால் கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. வேண்டுகோள் கடிதம் கொடுத்துள்ளேன். அதன் நமுணா எண்.3/MM/P1PS/2017 ஆகும். மேற்படி நான் குறிப்பிட்டுள்ள நமுணா எண் இவ்வழக்கின் புகார்தாரரான துர்க்கைசாமியை பரிசோதனை செய்ததற்கு கொடுக்கப்பட்ட நமுணா என்றால் சரிதான். மேற்படி குடிபோதையில் இருந்த எதிரிகளை சோதனை செய்ததற்கு நமுணா எண்.2/MM/P1PS/2017 ஆகும். மேற்படி நமுணாக்கள் எதுவும் கொடுக்கப்படவில்லை என்றாலும் இவ்வழக்கிற்காக நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. காவலர்களுக்கு பணிஒதுக்கீடு செய்யப்படும்போது பொதுநாட்குறிப்பேடு மற்றும் Daily duty roaster ல் அதுபற்றி குறிப்பிடப்படும் என்றால் சரிதான். காவலர்களுக்கு எந்த நேரத்தில் எந்த பணி ஒதுக்கீடு செய்யப்படுகிறது என்பது பற்றி அவர்கள் தங்களது பாக்கெட் டைரியிலும் குறிப்பிடப்பட வேண்டும் என்றால் சரிதான். இவ்வழககின் சாட்சிகள் துர்க்கைசாமி, துடியாண்டி, மாரியப்பன் ராமசாமி ஆகியோர்களுக்கு சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரத்திற்கான பொதுநாட்குறிப்பேடு Daily duty roaster மற்றும் பாக்கெட் டைரியின் நகல்கள் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான்.

இவ்வழக்கிற்கு அவை தேவைப்படாததால் அதனை தாக்கல் செய்யவில்லை. மேற்படி ஆவணங்களை தாக்கல் செய்தால் மேற்படி சாட்சிகள் சம்பவம் நடந்ததா சொல்லும் நேரத்தில்அங்கு இல்லை என்பது தெரிந்துவிடும் என்பதால் இவ்வழக்கிற்காக அவை மறைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சாட்சிகள் துர்க்கைசாமி, துடியாண்டி, மாரியப்பன், ராமசாமி ஆகியோர்கள் எதிரிகள் ஓட்டிவந்த வாகனத்தை நிறுத்தி தகாத வார்த்தைகளால் பேசினார்கள் என்றும் அதனால் அவர்கள் அருகிலிருந்த திருவில்லிபுத்தூர் நகர் காவல்நிலையதத்தில்புகார் கொடுக்க சென்றார்கள் என்றும் அவர்களை வழிமறித்து ஒரு பொய்யான புகாரை இவ்வழக்கில் தாக்கல்செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சாட்சி துர்க்கைசாமி தனக்குத்தானே ஒரு காயத்தை ஏற்படுத்திக்கொண்டு எதிரிகள் மீது ஒரு பொய்யான புகாரை கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. சம்பவயிடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கின் ஆவணங்கள் இவ்வழக்கிற்கு ஏற்றாற்போல் பின்னிட்டு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இவ்வழக்கின் சாட்சிகளை சரிவர புலன் விசாணை மேற்கொள்ளாமல் எதிரிகள் மீது குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.